©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 5.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 149A] சென்னை, திங்கட்கிழமை, ஜூன் 22, 2009
ஆனி 8, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள் :** | |
| எண் 6/2009—தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் .. | 2 – 4 |
| எண் 7/2009—தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. | 5 – 7 |
| எண் 8/2009—தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டம் .. .. | 9 –14 |

**2009–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2009**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## பகுதி–I

**முன்னுரையாக**

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பகுதி–II

**1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

120-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின், 120–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில் (a) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :— தமிழ்நாடு சட்டம் 15/1971.

‘‘a. (b) எனும் கூறில் பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, மன்றமானது, வேளாண்மை நோக்கத்திற்காக தனிப்பட்ட வகையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றவையல்லாத மற்றும் கட்டிடங்களைக் கொண்டிருப்பவை அல்லாத அல்லது அவற்றை அடுத்திருப்பவை மற்றும் அவற்றோடு இணைந்திருப்பவை அல்லாத நிலங்களைப் பொறுத்த அளவில், அவற்றின் அமைவிடத்தைக் கருத்தில் கொண்டு, அரசினால் வகுத்துரைக்கப்படக்கூடிய ஒரு சதுர அடிக்கான குறைந்த அளவு மற்றும் அதிக அளவு வீதங்களுக்கு உட்பட்டு, மன்றம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய வீதத்தில் அத்தகைய நிலங்களின் மீது சொத்து வரியை விதிக்கலாம்.’’.

## பகுதி–III

**1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

121-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின், 121–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில் (a) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :— தமிழ்நாடு சட்டம் 25/1981.

“a. (b) எனும் கூறில் பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, மன்றமானது, வேளாண்மை நோக்கத்திற்காக தனிப்பட்ட வகையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றவையல்லாத மற்றும் கட்டிடங்களைக் கொண்டிருப்பவை அல்லாத அல்லது அவற்றை அடுத்திருப்பவை மற்றும் அவற்றோடு இணைந்திருப்பவை அல்லாத நிலங்களைப் பொறுத்த அளவில், அவற்றின் அமைவிடத்தைக் கருத்தில் கொண்டு, அரசினால் வகுத்துரைக்கப்படக்கூடிய ஒரு சதுர அடிக்கான குறைந்த அளவு மற்றும் அதிக அளவு வீதங்களுக்கு உட்பட்டு, மன்றம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய வீதத்தில் அத்தகைய நிலங்களின் மீது சொத்து வரியை விதிக்கலாம்.”.

## பகுதி–IV

**1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.**

81-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின், 81–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவில், அதன் வரம்புரை உள்ளடங்கலான (a) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :– தமிழ்நாடு சட்டம் V/1920.

"a. (b) எனும் கூறில் பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, மன்றமானது, வேளாண்மை நோக்கத்திற்காக தனிப்பட்ட வகையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றவையல்லாத மற்றும் கட்டிடங்களைக் கொண்டிருப்பவை அல்லாத அல்லது அவற்றை அடுத்திருப்பவை மற்றும் அவற்றோடு இணைந்திருப்பவை அல்லாத நிலங்களைப் பொறுத்த அளவில், அவற்றின் அமைவிடத்தைக் கருத்தில் கொண்டு, மாநில அரசினால் வகுத்துரைக்கப்படக்கூடிய ஒரு சதுர அடிக்கான குறைந்த அளவு மற்றும் அதிக அளவு வீதங்களுக்கு உட்பட்டு, மன்றம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய வீதத்தில் அத்தகைய நிலங்களின் மீது சொத்து வரியை விதிக்கலாம்.''.

**பகுதி–V**

தமிழ்நாடு சட்டம் 65/1997.

**5.** **1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம், இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.** **நீக்கம்**

**நோக்க–காரண விளக்கவுரை**

**1920** ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 81 (3) (a) எனும் பிரிவும், 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 120 (4) (a) எனும் பிரிவும், 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 121 (4) (a) எனும் பிரிவும் வேளாண்மை நோக்கத்திற்காக தனிப்பட்ட வகையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றவையல்லாத மற்றும் கட்டிடங்களைக் கொண்டிருப்பவை அல்லாத அல்லது அவற்றை அடுத்திருப்பவை மற்றும் அவற்றோடு இணைந்திருப்பவை அல்லாத காலி நிலங்களின் மீது மேற்சொன்ன நிலங்களின் அசல் மதிப்பீட்டின் அடிப்படையில் சொத்து வரியை விதிப்பதற்கு வகை செய்கின்றன.

**2.** மாநில மூன்றாவது நிதி ஆணையமானது, காலிநிலங்களுக்கான சொத்து வரியை அவற்றின் அசல் மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்ணயிப்பதற்குப் பதிலாக, மேற்சொன்ன பிரிவுகள் (நிறுத்திவைக்கப்பட்டுள்ள) 2000-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் 114-ஆம் விதியின் அடிப்படையில், அரசினால் நிர்ணயிக்கப்படக்கூடிய சதுர அடி ஒன்றுக்கான குறைந்த அளவு மற்றும் அதிக அளவு வீதங்களுக்கு உட்பட்டு சொத்து வரியை நிர்ணயம் செய்து விதிக்கும் வகையில் திருத்தப்படலாம் எனப் பரிந்துரை செய்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவது குறித்து ஆய்வு செய்வதற்கு அமைத்துருவாக்கப்பட்ட உயர்நிலைக் குழுவானது மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் மேற்சொன்ன பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளது.

**3.** அரசானது, மாநில மூன்றாவது நிதி ஆணையம் மற்றும் உயர்நிலைக்குழுவின் மேற்சொன்ன பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு இந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டங்களைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது. அரசானது, தமிழ்நாடு சட்டங்கள் IV/1919, V/1920, 15/1971, 25/1981 ஆகியனவற்றைத் திருத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட, 34/1998 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 65/1997) நீக்கம் செய்வதெனவும் முடிவு செய்துள்ளது.

**4.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 2–ஆம் கூறினால் பதிலாக அமைக்க கருதப்பட்டவாறான 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 120 (4) (a) எனும் பிரிவும், இச்சட்ட முன்வடிவின் 3–ஆம் கூறினால் பதிலாக அமைக்க கருதப்பட்டவாறான 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 121 (4) (a) எனும் பிரிவும், இச்சட்ட முன்வடிவின் 4–ஆம் கூறினால் பதிலாக அமைக்க கருதப்பட்டவாறான 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 81 (3) (a) எனும் பிரிவும், அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2009**

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி–I**

**முன்னுரையாக**

*1.* (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி–II**

**1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV / 1919. **2.** 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின், 138–B எனும் பிரிவில்,— 138- B எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1). (2)–ஆம் உட்பிரிவில், “வணிகத்தை நடத்துகிற நிறுமம் ஒவ்வொன்றும் மற்றும் நபர் ஒவ்வொருவரும்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “வணிகத்தை நடத்துகிற நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒவ்வொன்றும் மற்றும் நபர் ஒவ்வொருவரும்” என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2). (4) ஆம் உட்பிரிவில்,–

(i) “நிறுமம் ஒன்று அல்லது நபர் ஒருவர் மெய்ப்பிக்குமிடத்து” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒன்று அல்லது நபர் ஒருவர் மெய்ப்பிக்குமிடத்து” என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(ii) “அத்தகைய நிறுமம் அல்லது நபர்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் அத்தகைய கிளை அல்லது பிரிவு அல்லது நபர்” என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(3). (6)–ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**பகுதி–III**

**1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15 / 1971. **3.** 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின், 169–B எனும் பிரிவில்,— 169- B எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1). (2)–ஆம் உட்பிரிவில், “வணிகத்தை நடத்துகிற நிறுமம் ஒவ்வொன்றும் மற்றும் நபர் ஒவ்வொருவரும்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “வணிகத்தை நடத்துகிற நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒவ்வொன்றும் மற்றும் நபர் ஒவ்வொருவரும்” என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (4) ஆம் உட்பிரிவில்,–

(i) "நிறுமம் ஒன்று அல்லது நபர் ஒருவர் மெய்ப்பிக்குமிடத்து" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒன்று அல்லது நபர் ஒருவர் மெய்ப்பிக்குமிடத்து" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(ii) "அத்தகைய நிறுமம் அல்லது நபர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் அத்தகைய கிளை அல்லது பிரிவு அல்லது நபர்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(3). (6)–ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி–IV

### 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

169- B எனும் பிரிவிற்கான திருத்தம்.

**4.** 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின், 169–B எனும் பிரிவில்,— தமிழ்நாடு சட்டம் 25 / 1981.

(1). (2)–ஆம் உட்பிரிவில், "வணிகத்தை நடத்துகிற நிறுமம் ஒவ்வொன்றும் மற்றும் நபர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "வணிகத்தை நடத்துகிற நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒவ்வொன்றும் மற்றும் நபர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2). (4)–ஆம் உட்பிரிவில்,–

(i) "நிறுமம் ஒன்று அல்லது நபர் ஒருவர் மெய்ப்பிக்குமிடத்து" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒன்று அல்லது நபர் ஒருவர் மெய்ப்பிக்குமிடத்து" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(ii) "அத்தகைய நிறுமம் அல்லது நபர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் அத்தகைய கிளை அல்லது பிரிவு அல்லது நபர்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(3). (6) –ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி–V

### 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

124- D எனும் பிரிவிற்கான திருத்தம்.

**5.** 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின், 124–D எனும் பிரிவில்,— தமிழ்நாடு சட்டம் V / 1920.

(1). (2)–ஆம் உட்பிரிவில், "வணிகத்தை நடத்துகிற நிறுமம் ஒவ்வொன்றும் மற்றும் நபர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "வணிகத்தை நடத்துகிற நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒவ்வொன்றும் மற்றும் நபர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2). (4)–ஆம் உட்பிரிவில்,—

(i) "நிறுமம் ஒன்று அல்லது நபர் ஒருவர் மெய்ப்பிக்குமிடத்து" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற

கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒன்று அல்லது நபர் ஒருவர் மெய்ப்பிக்குமிடத்து" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(ii) "அத்தகைய நிறுமம் அல்லது நபர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "நிறுமம், இந்து கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் அத்தகைய கிளை அல்லது பிரிவு அல்லது நபர்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(3). (6) –ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## நோக்க-காரண விளக்கவுரை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான சட்டங்களின் வகைமுறைகளின்படி, வணிகத்தை நடத்துகிற நிறுமம் ஒவ்வொன்றின்மீதும் மற்றும் நுண்ணறிவுத் தொழில், வணிகத் தொழில், வாழ்க்கைத் தொழில் அல்லது பணித் தொழில் எதிலும், செயலார்ந்த வகையிலோ மற்றபடியோ ஈடுபட்டிருக்கின்ற நபர் ஒவ்வொருவரின் மீதும் மாநகராட்சியும் நகராட்சியும் நுண்ணறிவுத் தொழில், வணிகத் தொழில், வாழ்க்கைத் தொழில், பணித் தொழில் ஆகியவற்றின் மீது வரி விதிக்கலாம்.

2. நபரொருவர், ஒரே தொழிலை மாநகரத்திற்குள்ளாக அல்லது நகராட்சிக்குள்ளாக ஓரிடத்தில் அல்லது அதற்கும் மேற்பட்ட இடங்களில் அதே பெயரில் செய்துவருகின்றவிடத்து, அந்நபரின் வருமானமானது தொழில் வரியை விதிக்கும் நோக்கத்திற்காக ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். தொழில் வரி என்பது உள்ளாட்சி அமைப்புகளின் பயனுக்கான வருமானமாதலால், மாநகராட்சியின் எல்லைக்குள் அல்லது நகராட்சிப் பகுதிக்குள் வணிகத்தை நடத்துகிற நிறுமம், இந்துக்கூட்டுக் குடும்பம், நிறுவகம், கழகம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பு, கூட்டுச் சங்கம், குழாம், நபர்களின் கூட்டமைப்பு அல்லது சங்கம் ஒன்றின் கிளை அல்லது பிரிவு ஒவ்வொன்றும், நுண்ணறிவுத் தொழில், வணிகத் தொழில், வாழ்க்கைத் தொழில், பணித் தொழில் ஆகிய தொழில்களில் ஏதொன்றின் மீதும் மாநகராட்சியானது அல்லது நேர்விற்கேற்ப நகராட்சியானது விதிக்கும் வரியினைச் செலுத்துதல் வேண்டும் என்ற செயல்விளைவைக் கொண்டு வருவதற்கென மேற்சொன்ன சட்டங்களைத் திருத்துவதன் மூலம் அத்தகைய சட்டங்களில் வெளிப்படையான வகைமுறைகளைச் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

3. இச் சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2009**

***பெருநகர்ப் பரப்பிடத்திற்கான மேம்பாட்டுத் திட்டத்தின் வரைவினைத் தயாரிப்பதற்காக, தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பெருநகர்ப் பரப்பிடம் ஒவ்வொன்றிலும் பெருநகர் திட்டக் குழுவை அமைத்துருவாக்குவதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி–I**

**முன்னுரையாக**

**1.** (1) இந்தச் சட்டம், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

**(3)** இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,– பொருள் வரையறைகள்.

(*a*) "அரசமைப்பு" என்றால் இந்திய அரசமைப்பு எனப் பொருள்படும்;

(*b*) "மாவட்டம்" என்றால் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள ஒரு வருவாய் மாவட்டம் எனப் பொருள்படும்;

(*c*) "அரசு" என்றால் மாநில அரசு எனப் பொருள்படும் ;

(*d*) "பெருநகர்ப் பரப்பிடம்" என்றால் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, பெருநகர்ப் பரப்பிடம் ஒன்று என்பதாக அரசால் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கப்படக்கூடிய, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய மற்றும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நகராட்சிகள் அல்லது ஊராட்சிகள் அல்லது அவற்றை ஒட்டி அமைந்த பிற பரப்பிடங்களைக் கொண்டிருக்கிற, பத்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற பரப்பிடம் ஒன்று எனப் பொருள்படும்;

(*e*) "நகராட்சி" என்றால் அரசமைப்பின் 243–Q எனும் உறுப்பின்படி அமைத்துருவாக்கப்பட்ட தன்னாட்சி நிறுவனம் ஒன்று எனப் பொருள்படும்;

(*f*) "ஊராட்சி" என்றால் அரசமைப்பின் 243–B எனும் உறுப்பின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஊராட்சி எனப் பொருள்படும்;

(*g*) "மக்கள் தொகை" என்றால் தொடர்பான இலக்கங்கள் வெளியிடப்பட்டுள்ள கடைசி முந்தைய மக்கள் தொகை கணக்கெடுப்பில் அறுதி செய்யப்பட்டவாறான மக்கள் தொகை எனப் பொருள்படும்;

**பகுதி–II**

**பெருநகர் திட்டக் குழுவை அமைத்துருவாக்குதலும், அதன் அலுவற்பணிகளும், அதனோடு தொடர்புடைய பொருட்பாடுகளும்.**

**3. (1)** பெருநகர்ப் பரப்பிடம் முழுவதற்கும் மேம்பாட்டு திட்ட வரைவு ஒன்றினைத் தயாரிப்பதற்கு அரசு தீர்மானிக்கக் கூடியவாறு தலைமையாளர் ஒருவர், துணைத் தலைமையாளர் ஒருவர் உள்ளடங்கலாக, அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டு (இதன் பின்பு குழு எனக் குறிப்பிடப்படுவதான) பெருநகர் திட்டக் குழு ஒன்று, பெருநகர்ப் பரப்பிடம் ஒவ்வொன்றிலும் அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும்: பெருநகர் திட்டக்குழு.

**வரம்புரை :**

ஆனால், அந்தப் பெருநகர்ப் பரப்பிடத்திலுள்ள நகராட்சிகளின் மற்றும் ஊராட்சிகளின் மக்கள் தொகைக்கு இடையே உள்ள விகிதாச்சாரத்திற்கு ஏற்ப பெருநகர்ப் பரப்பிடத்திலுள்ள நகராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் ஊராட்சிகளின் தலைவர்களாலும் அவர்களுக்கிடையேயிருந்து அக்குழுவின் உறுப்பினர்களில் மூன்றுக்கு இரண்டு பங்கு என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்குக் குறையாத அளவில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) குழுவில், இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் மற்றும் அக்குழுவிற்கு ஒதுக்கியளிக்கப்பட்டுள்ள அலுவற்பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையானதெனக் கருதப்படக்கூடிய அத்தகைய அமைப்புகளின் மற்றும் நிறுவனங்களின் சார்பாற்றமானது அரசினால் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(3) குழுவானது, அரசு அறிவிக்கையின் வாயிலாக அதற்கு ஒதுக்கியளிக்கக் கூடியவாறு, பெருநகர்ப் பரப்பிடத்திற்கான திட்டம் மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பான அத்தகைய அலுவற்பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

(4) குழுவானது, மேம்பாட்டுத் திட்ட வரைவினைத் தயாரிப்பதில்,—

(*a*) (i) பெருநகர்ப் பரப்பிடத்திலுள்ள நகராட்சிகளாலும் ஊராட்சிகளாலும் தயாரிக்கப்பட்ட திட்டங்களையும்;

(ii) அப்பரப்பிடத்தின் ஒருங்கிணைந்த இடவசதியை திட்டமிடுதல், நீரையும், பிற இயற்பொருள் சார்ந்த இயற்கை வளங்களையும் பங்கிடுதல், கட்டமைப்பிற்கான மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைந்த மேம்பாடு ஆகியன உள்ளடங்கலாக, நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்குமிடையேயான பொதுவான அக்கறை என்பதாக அமைந்த பொருட்பாடுகள்;

(iii) இந்திய அரசினாலும், மாநில அரசினாலும் குறிப்பிட்டு வரையறை செய்யப்பட்ட ஒட்டு மொத்தமான குறிக்கோள்களும் முந்துரிமைகளும்;

(iv) இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் முகவாண்மைகளால், பெருநகர்ப் பரப்பிடத்தில் பெரும்பாலும் செய்யப்படக் கூடிய முதலீடுகளின் அளவு மற்றும் தன்மை மற்றும் நிதி என்ற வகையிலோ அல்லது பிறவாறோ அமைந்த பிற கிடைக்கத்தக்க வழி வளங்கள்;

ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(*b*) அரசு ஆணையின் வாயிலாக குறித்துரைக்கக் கூடிய அத்தகைய நிறுவனங்களையும் அமைப்புகளையும் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு குழுவின் தலைமையாளரும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறான மேம்பாட்டுத் திட்டத்தை அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

தலைமையாளர், துணைத் தலைமையாளர், தேர்ந்தெடுக்—கப்பட்ட உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக்காலம் மற்றும் காலியிடத்தை நிரப்புதல்.

**4.** (1) ஒவ்வொரு குழுவின் தலைமையாளர், துணைத் தலைமையாளர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்கள் ஆகியோர் அரசினால் நியமிக்கப்பட வேண்டும்.

(2) குழுவின் தலைமையாளர், துணைத் தலைமையாளர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக்கால அளவும் பிற பணி நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(3) குழுவின் தலைமையாளர், துணைத் தலைமையாளர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டதொரு உறுப்பினரல்லாத பிற உறுப்பினர் எவரொருவரின் பதவியில் உள்ள காலியிடம் எதுவும் அரசினால் செய்யப்படும் புதிய நியமனம் மூலமாக நிரப்பப்பட வேண்டும்.

குழு உறுப்பினர்களின் தேர்தல்.

**5.** குழுவின் உறுப்பினர்களின் தேர்தலுக்கான முறையும் அது தொடர்பான பொருட்பாடுகள் அனைத்தும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

குழுவின் தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்கால அளவும் படித் தொகையும்.

**6.** குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு கால அளவு ஒன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அக்குழுவின் அல்லது துணைக்குழு எதனின் கூட்டத்திற்கு வருகை புரிவதற்கு, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படித் தொகையைப் பெறுதல் வேண்டும்:

**வரம்புரை :**

ஆனால் அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவரும், நகராட்சி ஒன்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக அல்லது நேர்விற்கேற்ப ஊராட்சி ஒன்றின் தலைவராக இருப்பது அற்றுப் போவதன் பேரில், ஐந்தாண்டு கால அளவானது முடிவடைந்திருக்கவில்லை என்ற போதிலும், குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதும் அற்றுப் போதல் வேண்டும்; மற்றும் அக் காலியிடமானது வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் தேர்தல் மூலமாக நிரப்பப்படுதல் வேண்டும்.

**7.** குழுவில், தொடக்க நிலையிலிருந்தோ அல்லது அதற்குப் பின்னரோ காலியிடம் எதுவும் இருந்தது என்ற காரணத்திற்காகவோ அல்லது அமைத்துருவாக்குவதில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்திற்காகவோ குழுவின் செயற்பாடு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லத்தகாததாக ஆதல் கூடாது; அல்லது அதனை ஆட்சேபத்திற்குரியதாக ஆக்குதல் கூடாது. செல்லத் தக்கதாக்குதல்.

**8. (1)** குழுவானது வகுத்துரைக்கப்படக் கூடியவாறு அத்தகைய இடங்களிலும், அத்தகைய நேரங்களிலும் கூடுதல் வேண்டும்; மற்றும் கூட்டமொன்றுக்கான குறைவெண் வரம்பு உள்ளடங்கலான அதன் கூட்ட அலுவல் நடவடிக்கை தொடர்பான அத்தகைய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். குழுவின் கூட்டம்.

(2) தலைமையாளர் அல்லது காரணம் எதற்காகவும் அவர் கூட்டமெதிலும் கலந்து கொள்ள இயலாமல் இருப்பாராயின் துணைத் தலைமையாளர் அல்லது, காரணமெதற்காகவும் கூட்டமெதிலும் இருவரும் கலந்து கொள்ள இயலாமல் இருப்பார்களாயின், வந்திருக்கிற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற உறுப்பினர் எவரும் கூட்டத்திற்கு தலைமையேற்றல் வேண்டும்.

**9. (1)** குழுவானது, அது தேவையானதென அல்லது உகந்ததென கருதக்கூடியவாறு, முழுவதும் குழு உறுப்பினர்களைக் கொண்ட அல்லது முழுவதும் பிற நபர்களைக் கொண்ட அல்லது பகுதி அளவில் குழு உறுப்பினர்களையும், பகுதி அளவில் பிற நபர்களையும் கொண்ட அத்தகைய எண்ணிக்கையிலான துணைக்குழுக்களை, அது கருதுகிறவாறான அத்தகைய நோக்கத்திற்காக அமைத்துருவாக்கலாம். துணைக் குழுக்கள்.

(2) குழுவின் உறுப்பினர்கள் அல்லாத துணைக்குழு ஒன்றின் உறுப்பினர்களுக்கு அதன் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கு, வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கட்டணங்களும் படித்தொகைகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

## பகுதி–III

### பல்வகை

10. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதனவாயிராத வகையில் அந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றக்கூடிய அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம் : இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**வரம்புரை:**

ஆனால், அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் கால அளவு முடிவுற்றதற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**11.** அரசானது, குழுவிற்கு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதற்காக, அது தக்கதெனக் கருதுகிறவாறான அத்தகைய பணிப்பாணைகளை அவ்வப்போது வழங்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடப்பது குழுவின் கடமையாக இருத்தல் வேண்டும். பணிப்பாணைகளை வழங்குவதற்கான அதிகாரம்.

**12.** இந்தச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலுமோ, என்ன அடங்கியிருந்த போதிலும், அரசானது, 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் 9–A எனும் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் பெருநகர் திட்டக் குழுவிற்கு உதவி செய்வதற்கான அதிகார அமைப்பு.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

குழுமம் உள்ளடங்கலான **11–**ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட அதிகார அமைப்பு எதனையும், மேம்பாட்டு திட்ட வரைவினைத் தயாரிப்பதில் பெருநகர் திட்டக்குழுவிற்கு உதவி செய்வதற்கு நியமிக்கலாம்; அவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரமைப்பானது, பெருநகர் திட்டக்குழுவின் செயலகமாகவும் செயல்படுதல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**13. (1)** அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் எதையுமோ நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (*a*) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(*b*) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னரோ அல்லது அதனையடுத்த கூட்டத்தொடரிலோ அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதியானது அல்லது அறிவிக்கையானது அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும், அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது நடைமுறைக்கு வராமற் போனது எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்கீழ் முன்னதாகச் செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

## பகுதி–IV

## 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்

3-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**14.(1)** (இதன் பின்பு **1919–**ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) **1919–**ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் **3–**ஆம் பிரிவில், (13-AA) எனும் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும் தமிழ்நாடு சட்டம் IV/1919.

27–B எனும் பிரிவை விட்டுவிடுதல்.

(2) **1919–**ஆம் ஆண்டுச் சட்டத்தின் 27–B எனும் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்க-காரண விளக்கவுரை**

**1992**–ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து நான்காம் திருத்தச்) சட்டத்தின் வாயிலாக அரசமைப்புச் சட்டத்தில் புகுத்தப்பட்ட **243**–ZE எனும் உறுப்பு, அரசமைப்பின் **243**–P எனும் உறுப்பின் (C) எனும் கூறின்படி ஆளுநரால் அறிவிக்கையின்மூலம் பெருநகர்ப் பரப்பிடம் என்பதாக குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பெருநகர்ப் பரப்பிடத்தின் முழுவதுமான பகுதியின் மேம்பாட்டிற்கென, மேம்பாட்டுத் திட்ட வரைவினைத் தயாரிப்பதற்காக, பெருநகர்ப் பரப்பிடம் ஒவ்வொன்றிலும், பெருநகர் திட்டக்குழுவினை அமைத்துருவாக்குவதற்கு வகை செய்கிறது. அரசமைப்பின் மேற்சொன்ன கூறின்படி, பெருநகர் திட்டக்குழுவானது, பெருநகர்ப் பரப்பிடத்திலுள்ள பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை கருத்தில் கொண்டு அத்தகைய வரைவு மேம்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டியுள்ளது. மேலும், அக்குழுவானது, அப்பரப்பிடத்தின் ஒருங்கிணைந்த இடவசதியை திட்டமிடுதல், நீரையும், பிற இயற்பொருள் சார்ந்த இயற்கை வளங்களையும் பங்கிடுதல், கட்டமைப்பிற்கான மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைந்த மேம்பாடு ஆகியன உள்ளடங்கலாக, நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் இடையே பொதுவான அக்கறை என்பதாக அமைந்த பொருட்பாடுகளையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். அத்திட்டம், இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் குறிக்கோள்களையும், முந்துரிமைகளையும் மற்றும் இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் முகவாண்மைகளால், பெருநகர்ப் பரப்பிடத்தில் பெரும்பாலும் செய்யப்படக் கூடிய நிதி முதலீடுகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

**2.** அரசமைப்பின் மேற்சொன்ன கூறானது, பெருநகர்ப் பரப்பிடத்திலுள்ள நகராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் ஊராட்சிகளின் தலைவர்களாலும் அவர்களுக்கிடையேயிருந்து அக்குழுவின் உறுப்பினர்களில் மூன்றுக்கு இரண்டு பங்கு என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கும் குறையாத அளவில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, குழுக்களின் அலுவற்பணிகள் உள்ளடங்கலாக பெருநகர் திட்டக்குழுக்களை அமைத்துருவாக்குதல், அத்தகைய குழுக்களின் பதவியிடங்களை நிரப்பும்முறை மற்றும் அத்தகைய குழுக்களின் தலைமையாளர்களை தேர்வு செய்யும்முறை ஆகிய பொருட்பாடுகள் குறித்து, சட்டத்தின் வாயிலாகச் சட்டமன்றமானது வகை செய்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கிறது. எனவே, அரசானது, பெருநகர் திட்டக்குழுக்களை அமைத்துருவாக்குவதற்காகவும் மேற்சொன்னவாறு அத்தகைய குழுக்களை அமைத்துருவாக்குதல் தொடர்பாக இடைவிளைவாக ஏற்படக்கூடிய பிற அனைத்து நோக்கங்களுக்காகவும் சட்டமொன்றை இயற்றுவதென முடிவு செய்துள்ளது.

**3.** இச்சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 1 (3), 2 (d), 3 (2), 3 (3), 3 (4) (b), 4 (2), 5, 6, 8 (1), 9 (2), 10, 11, 12, 13(1) ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அறிவிக்கைகளை அல்லது ஆணைகளை அல்லது பணிப்பாணைகளைப் பிறப்பிப்பதற்கோ அல்லது நேர்விற்கேற்ப விதிகளைச் செய்வதற்கோ அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 6-ஆம் கூறானது, பெருநகர் திட்டக்குழு உறுப்பினர்களுக்கு, கூட்டங்களுக்கு வருகை புரிவதற்கு கட்டணங்களையும் படித்தொகைகளையும் வழங்க வகை செய்கிறது. இச்சட்ட முன்வடிவின் 9-ஆம் கூறானது, பெருநகர் திட்டக்குழுவின் உறுப்பினர்கள் அல்லாத துணைக்குழுவொன்றின் உறுப்பினர்களுக்கு, கூட்டங்களுக்கு வருகை புரிவதற்குக் கட்டணங்களையும் படித்தொகைகளையும் வழங்க வகை செய்கிறது.

2. எனவே, இச்சட்டமியற்றலானது, மாநிலத் தொகு நிதியத்திலிருந்து செலவு செய்வதை உள்ளடக்கியிருக்கிறது. எனினும் இச்சட்ட முன்வடிவின் வகைமுறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கு ஏற்படும் செலவினத்தை இந்த நிலையில் எந்தக் கோணத்திலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.